**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண்**
**அறிக்கை**
**(27.08.2022 முதல் 31.08.2022 )**

**அறிக்கை எண் 068/2022** **தேதி.26.082022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32$^{\circ}$செ முதல் 37$^{\circ}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22$^{\circ}$செ முதல் 27$^{\circ}$செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16$^{\circ}$செ முதல் 22$^{\circ}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10$^{\circ}$செ முதல் 11$^{\circ}$செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (23.08.2022 முதல் 25.08.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 31.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 23/08 | 24/08 | 25/08 | தேதி | நாள்-1 27/08 | நாள்-2 28/08 | நாள்-3 29/08 | நாள்-4 30/08 | நாள்-5 31/08 |
| 23.8 | 7.2 | 5.4 | மழை (மி.மீ) | 35 | 34 | 16 | 32 | 34 |
| 32 | 31 | 28 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 32 | 31 | 31 | 31 |
| 22 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 21 | 21 | 21 |
| 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 87 | 88 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 90 | 90 | 90 | 90 |
| 76 | 81 | 95 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 60 | 60 | 60 | 60 |
| 23 | 21 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 10 | 10 | 8 | 8 |
| 230 | 230 | 200 | காற்றுவீசும் திசை | 280 | 280 | 290 | 300 | 300 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (27.082022 முதல் 31.08.2022)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயககன பாளையம் | பொள்ளாச்சி வடக்கு | பொள்ளாச்சி தெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 27-08-2022 | 63 | 84 | 91 | 81 | 91 | 93 | 70 | 70 | 92 | 79 | 87 | 88 |
| 28-08-2022 | 40 | 52 | 57 | 48 | 51 | 53 | 43 | 43 | 52 | 47 | 50 | 50 |
| 29-08-2022 | 30 | 48 | 53 | 38 | 40 | 45 | 34 | 34 | 44 | 41 | 42 | 40 |
| 30-08-2022 | 36 | 54 | 63 | 46 | 49 | 54 | 40 | 40 | 52 | 46 | 49 | 49 |
| 31-08-2022 | 23 | 37 | 33 | 26 | 22 | 26 | 26 | 26 | 27 | 36 | 31 | 22 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு மிதமானது முதல் கன மழையுடன் காற்றின் வேகம் **6 – 8** கி.மீ வரை எதிர் பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு நீர்பாசனம் செய்வதனை ஒத்திவைக்க வேண்டும். உயரமான பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கனமழை எதிர் பார்க்கப்படுவதால் நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்தப்பகுதியில் இருப்போர் கால்நடைகளை கவனமாக பார்த்துக்கொள்ளுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் களைக்கொல்லி மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதனை தவிர்க்கவும். |
| நெல் | வளர் மற்றும் பூக்கும் பருவம் | மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல் பயிருக்கு வடிகால் வசதி ஏற்படுத்தவும்.<br>கனமழை எதிர்பார்க்கப்படுவதால், நெல் விவசாயிகள் தங்கள் நாற்றங்கால் விதைத்து மூன்று நாட்களுக்குள் ஆகியிருந்தால் மழை வரும் சமயங்களில் / மாலை வேளைகளில் தண்ணீர் தேக்குவதன் மூலம் நெல் இடம் மாறுவது தடுக்கப்பட்டு முளைத்திறன் பாதிக்கப்படாமல் தடுக்கலாம்.<br>கீழ் பவானி பாசனப்பகுதியில் உள்ள நிலங்கள் சாய்வாக இருப்பதால் நடவு செய்த ஒரு வாரத்திற்குள் மழை அதிகமாக பெய்திருந்தால் வாய்க்காலில் இருந்து தண்ணீர் வந்து வரப்பு உடைப்பு ஏற்படும். இதை தடுக்க வாய்க்காலில் இருந்து வயலுக்குள் தண்ணீர் உட்புகாமல் தடுக்க வேண்டும். |
| சோளம் | விதைப்பு | பெறக்கூடிய மழையைப் பயன்படுத்தி மானாவாரியில் தீவனச்சோளம் விதைப்பு மேற்கொள்ளலாம். |

| | | |
|---|---|---|
| மக்காச்சோளம் | விதைப்பு | பெறப்பட்ட மற்றும் எதிர் பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மக்காச்சோளம் இறவை மற்றும் மானாவாரி பயிராக பயிர் செய்யலாம். |
| தட்டைப்பயிர் | விதைப்பு | பெறக்கூடிய மழையைப் பயன் படுத்தி மானாவாரியில் தட்டப்பயிர் விதைப்பு மேற்கொள்ளலாம். |
| தக்காளி | நடவு | மழை எதிர்பார்க்கப்படுவதால் பார் மற்றும் சாலில் தக்காளி நாற்றுகளை நடவு செய்யவதன் மூலம் தண்ணீர் தேக்கத்தை தடுத்து தக்காளி பயிர் அழுகலை குறைக்கலாம். |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | மழை எதிர்பார்க்கப்டுவதால் மஞ்சளில் தக்க வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும் மண்ணின் அதிக ஈரப்பதம் மற்றும் மேக மூட்டத்தின் காரணமாக மஞ்சளில் கிழங்கு அழுகல் நோய் வரவாய்ப்புள்ளதால் 1 சத போர்டாக்ஸ் கரைசல் (அ) 0.25 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலை தூரில் ஊற்றுவதன் மூலம் நோய் பரவாமல் தடுக்கலாம். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 10 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழை மற்றும் கரும்புக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |
| கால்நடைகள் | | மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.<br>காற்றின் வேகம் மற்றும் மேகமூட்டம் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை போக்க தேவையான அளவு குடிநீர் கொடுக்கவும் |

## குறுஞ்செய்தி

- மழை எதிர்பார்க்கப்படுவதால் பார் மற்றும் சாலில் தக்காளி நாற்றுகளை நடவு செய்யவதன் மூலம் பயிர் அழுகலை குறைக்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**